சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **01 / 2017**

பெயர்: இளையராணி வா.சா.1 தேதி **11.02.2026**

ஆறாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கில் நான் வாதி ஆவேன். முதல் பிரதிவாதி எனது தகப்பனார். எனது தகப்பனாருக்கு இரண்டு மனைவிகள். என்னுடைய பங்கையும் சேர்த்து பிரதிவாதிகள் விற்பனை செய்துவிட்டார்கள். எனது பங்கை விற்ற சமயத்தில் சொத்தை பிரித்துக்கொண்டோமா என்றால் இல்லை. எனது தகப்பனாருடன் பிறந்தவர்கள் யார் எனில் லட்சுமி, ராமசாமி, கருப்பன் ஆகியோர்கள். மேற்படியார்களுக்கிடையே பாகப்பிரிவினை நடைபெற்றுவிட்டதா என்றால் 1969ம் ஆண்டு நடைபெற்றுவிட்டது. மேற்படி 1969ம் தேதியிட்ட ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் எனது தகப்பனார் உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார். எனது தகப்பனார் இறந்ததற்கான இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன் என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் இரண்டாவது மனைவின் மகள் என்பதால் நீதிமன்றமூலம் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்ய சொன்னதால் நான் வாரிசு சான்றிதழ் பெறவில்லை. வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு என்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 7 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். 7வது பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த சங்கதி எனக்கு எப்பொழுது தெரியும் என்றால் மற்றவர்கள் சொல்லி தான் தெரியும். ஆனால் தேதி, மாதம் எனக்கு ஞாபகம் இல்லை. 2012ம் ஆண்டு என்று மட்டும் தெரியும். மேற்படி கிரையம் நடைபெற்று இவ்வழக்கு தாக்கல் செய்யும் காலகட்டத்தில் நான் 7வது பிரதிவாதிக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன். (சாட்சி தற்பொழுது வாய்மொழியாக கேட்டதாக கூறுகிறார்). எனது தகப்பனாருக்கு கிரையம் பெற்றதாக சொல்லக்கூடிய சொத்தை தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ-3 ஆவணத்தில் இவ்வழக்கின் 1 முதல் 5 பிரதிவாதிகள் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் 14.06.2012ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் 1 முதல் 10 பக்கங்களில் இளையராணி என குறிப்பிட்டு அதன் மீது வெள்ளை (whitner) பூசப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி என்னிடம் காண்பிக்கக்கூடிய 14.06.2012ம் தேதியிட்ட அசல் கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.1. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள

சொத்தானது  கிரையம் கொடுத்த சமயத்தில் எனது  தகப்பனாரால் வங்கியில் அடமானம் வைக்கப்பட்டியிருந்ததா என்றால் அடமானம் வைக்கப்பட்டியிருந்தது. ஆறாவது பிரதிவாதியான அர்சுனன் என்பவர்  முதல் பிரதிவாதி வைத்த அடமான கடனை கட்டுவதற்காகவும், எனது குடும்ப செலவிற்காகவும் இந்த நிலம் விற்கப்பட்டது என்றால் சரியல்ல.

(ஆறாவது பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.02.11 15:12:59 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.